# உயிரியல் பொருட்கள் மற்றும் உடல்நலம் குறித்துப் பெற்ற தரவுகளை மருத்துவ ஆய்வுக்காக பாவிப்பது குறித்த தகவல்கள்

அன்பான பெண் நோயாளிகளே, அன்பான ஆண் நோயாளர்களே

Insel Gruppe ன் வைத்தியர்களும் விஞ்ஞானிகளும் பல வருடங்களாக மருத்துவத்துறையின் முன்னேற்றத்திற்காக தமது பங்களிப்பை மருத்துவ ஆய்வுகளில் வழங்கிவருவதன் பலனாக மக்களின் உடல்நலம் பேணப்படுகின்றது. கடந்த வருடங்களில் இதன்மூலம் நோய்களில் முற்பாதுகாப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சைகளில் பெருமளவு முன்னேற்றம் காண முடிந்துள்ளது. இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளதற்குக் காரணம் அதிகளவு நோயாளர்கள் உயிரியல் பொருட்களை (உ-ம் இரத்தம், சிறுநீர், உள் உறுப்புகளின் மாதிரிகைகளை) வழங்கியமையால் ஆகும். உங்கள் சிகிச்சையின் அல்லது கண்டறிதலின் பின்னர் மேலதிகமாகவுள்ள உயிரியல் பொருட்கள், மிகுதிப் பொருட்கள் என அழைக்கப்படுவன, ஆய்வுகளுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்தவை. நாங்கள் உங்களது உயிரியல் பொருட்களையோ அல்லது உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகளையோ உங்கள் நோயாளர் இடாப்பிலிருந்து ஆய்வுகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பது குறித்துத் தீர்மானிப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. உங்களது சம்மதம் சொந்த விருப்பமாகும். இதன்மூலம் ஆய்வுகளுக்கு நீங்கள் ஒரு முக்கிய பங்களிக்கின்றீர்கள்.

**நீங்கள் ஆய்வுகளுக்கான ஒரு பங்களிப்பை எவ்வாறு மேற்கொள்ள முடியும்?**
சம்மதத்தை வெளிப்படுத்தும் படிவத்தில் கையொப்பமிடுவதன் மூலம் உங்கள் நோயாளர் இடாப்பிலிருந்து தரவுகளை வழங்குகின்றீர்கள். அத்துடன் மேலதிகமாக நோயைக் கண்டறிதலின் பின்னர் மிகுதியாகவுள்ள உயிரியல் பொருட்களை ஆய்வுத் திட்டங்களுக்காகப் பாவிக்க அனுமதிக்கின்றீர்கள். உங்கள் சம்மதத்தை எவ்வித காரணமும் காட்டாமல் விலக்கிக் கொள்வதற்கு உங்களுக்கு எந்தவேளையிலும் உரிமை உள்ளது.

**உங்கள் உடல்நலம் குறித்து பெறப்பட்ட தகவல்களை பாவிக்க எவருக்கு அனுமதியுண்டு?**
முன்னுரிமையாக Insel Gruppe ஆய்வாளர்கள் மற்றும் பேர்ண் பல்கலைக்கழகம். உங்களது உயிரியல் பொருட்கள் மற்றும் உங்களைப்பற்றிய தரவுகள் பாதுகாக்கப்பட்ட அல்லது அடையாளம் தெரியாத வகையில் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் ஆய்வு செய்யும் திட்டங்களுக்காக வழங்கப்படும் சந்தர்ப்பமுள்ளது. இதன்போது நீங்கள் சொந்தமாக எவ்வித பின்விளைவுகளுக்கும் ஆட்கொள்ளப்பட மாட்டீர்கள்.

**உங்கள் உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தகவல்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டுள்ளது?**
Insel Gruppe உங்களது உயிரியல் பொருட்கள் மற்றும் உங்களைப்பற்றிய தரவுகளைப் பாதுகாத்து வைப்பதில் உள்ள சட்டரீதியான விதிமுறைகளுக்கு உயர்ந்த பெறுமானத்தை வழங்குகின்றது. சொந்தத் விபரங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. உங்கள் சம்மதமின்றி உங்கள் தரவுகள் மறைக்கப்படதாக மட்டும் அத்துடன் மிகுதிப்பொருட்டகள் நிச்சயமாக அடையாளம் தெரியாத வகையில் ஆய்வுத்திட்டங்களுக்காகப் பாவித்துக் கொள்ள முடியும். இதற்கு நீங்கள் உடன்படாவிட்டால், இதற்கு எதிராக நீங்கள் எந்த வேளையிலும் ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம். நீங்கள் எந்த வேளையிலும் உங்கள் தரவுகளைப் பார்வையிட உரிமையுண்டு.

**உங்களுக்கு ஆய்வின் முடிவுகள் குறித்து அறியத்தரப்படுமா?**
இங்கு வழங்கப்பட்டுள்ள சம்மதத்தை வெளிப்படுத்தல், கற்கைநெறிகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்டுகின்றது, இதன்போது ஒரு தனிநபர் குறித்த முடிவுகள் நெருக்கமாக ஆராயப்படுவதில்லை. ஆகவே சம்மதத்தை வெளிப்படுத்துவதில் கையொப்பமிடுவதன் மூலம், உங்களது உயிரியல் பொருட்களிலோ அல்லது உடல்நலம் குறித்துப் பெறப்பட்ட தரவுகளிலோ இருந்து பெறப்பட்ட ஆய்வுத்திட்ட முடிவுகளை உங்களுக்கு அறியத்தருவதை தவிர்த்துக் கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது.

**தற்சமயம் ஆய்வின் முடிவுகளால் ஒரு உற்பத்திப் பொருள் மேற்கொள்ளப்படுமானால், உங்களுக்கு நிதிப் பங்களிப்பு வழங்கப்படுமா?**
நிதிப்பங்களிப்பு வழங்கப்படக்கூடாது என சட்டரீதியாக முடிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஆய்வு விடயங்கள் குறித்து நீங்கள் எங்கு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்?**
கைநூல் „சம்மதத்தை வெளிப்படுத்தலுடனான மேலதிக இரத்தம் எடுத்தல் பற்றிய விளக்கம்“, இது காத்திருக்கும் அறைகளில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது நோயாளரைப் பதிவுசெய்யும் இடம் மற்றும் இணையத்தளம் அல்லது தொலைபேசி இலக்கம் 031 632 58 45 ல் பெற்றுக்கொள்ளலாம், இதில் விளக்கமான தகவல்கள் அடங்கியுள்ளது.

## BioBank Bern க்கு ஒரு மேலதிகமான இரத்தம் எடுத்தல் குறித்த தகவல்கள்

உறுதியாக எடுக்கக்கூடிய ஆய்வின் முடிவுகளுக்காக, பல்வேறு தரமான பெறுமதி வாய்ந்த மாதிரிகைகளில் ஆய்வாளர்கள் தங்கியுள்ளனர். இக்காரணத்தினால் Insel Gruppe க்கு மிகவும் முக்கியமானது, நோயாளராகிய உங்களிடமிருந்து நோய்களைக் கண்டறிவதற்கு மற்றும் சிகிச்சைக்காக ஏற்கனவே பெறப்பட்ட மாதிரிகைகளுடன் **மேலதிகமாக** ஒருமுறை இரத்த மாதிரியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த மேலதிக இரத்தம் எடுத்தலுக்கு உங்கள் சம்மதம் தேவை என்பதுடன் அது உங்கள் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது மற்றும் நீங்கள் இந்த சம்மதத்தை பிரத்தியேகமாக வழங்குவீர்கள். இந்த மேலதிக இரத்தம் எடுத்தல் நீங்கள் வைத்திய நிலையத்திலோ அல்லது தங்கியிருக்காது சிகிச்சை பெறும் நிலையத்திலோ மேற்கொள்ளப்படும்.

## ஏன் ஒரு மேலதிக இரத்தம் எடுத்தல் தேவைப்படுகின்றது?

உங்களுக்கான சிகிச்சையின்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுடன் ஒப்பிடும்போது, ஆய்வுகளுக்கான மாதிரிகளின் தராதரங்களில் வேறு தேவைகள் உள்ளது. இதில் முக்கியமானது என்னவென்றால், ஒரு ஆய்வில் பயன்படுத்தப்படும் அனைத்து மாதிரிகைகளும் ஒரே விதமாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். ஆகவே உங்கள் சம்மதத்துடன் ஒருமுறையில் 2 மேலதிக குழாய்களில் இரத்தம் எடுக்கப்படும். இது இயலுமானவரை வழமையான இரத்தம் எடுத்தலின்போது மேற்கொள்ளப்படும் அல்லது ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள Venenverweilkatheter யில் இருந்து பெறப்படும்.
ஒரு இரத்த மாதிரியைப் பொறுத்தவரை, அதை எடுத்தல், எடுத்துச் செல்லல் மற்றும் அதை பாதுகாத்து வைக்கும் முறைகள் அதன் தராதரத்தை நிர்ணயிக்கும். மேலதிகமாக எடுக்கப்படும் இரத்தம் காரணமாக இந்த நடைமுறை ஒழுங்காக்கப்பட்டு பதிவு மேற்கொள்ளப்படும்.

## ஏன் மேலதிகமான தரவுகள் (உயரம்/நிறை/இனம்) தேவைப்படுகின்றன?

உங்கள் இரத்த மாதிரி ஆய்வுகளுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்தவை. ஏற்கனவே உள்ள உடல்நலம் குறித்த தரவுகளுடன், மேலதிகமான தரவுகள் மாதிரியை தரம் பிரிக்க உதவிக்கொள்கின்றன. இதன்மூலம் உங்கள் மாதிரிகள் யாருக்கு ஆய்வு நடவடிக்கைக்களுக்காக வழங்கப்படுகின்றதோ, அவர்களுக்கு பெருமளவில் உதவிக்கொள்ளும்.

## எங்கு இரத்த மாதிரிகை பாதுகாத்து வைக்கப்படும்?

இரத்தம் BioBank Bern ல் சட்டரீதியான விதிமுறைகளுக்கு அமைவாகவும் BioBank Bern ன் ஒழுங்கு முறைப்படியும் பாதுகாத்து வைக்கப்படும்.

## எங்கு நான் BioBank விடயங்கள் குறித்து மேலதிக தகவல்களைப் கண்டுகொள்ளலாம்?

கைநூல் „சம்மதத்தை வெளிப்படுத்தலுடனான மேலதிக இரத்தம் எடுத்தல் பற்றிய விளக்கம்“, இது காத்திருக்கும் அறைகளில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது நோயாளரைப் பதிவுசெய்யும் இடம் மற்றும் இணையத்தளம் அல்லது தொலைபேசி இலக்கம் 031 632 58 45 ல் பெற்றுக்கொள்ளலாம். BioBank ன் இணையத்தளம் அத்துடன் BioBank Bern ன் ஒழுங்குவிதிகளை www.biobankbern.ch. எனும் இணையத்தள முகவரியில் காணலாம்.

**நீங்கள் வழங்கும் சம்மதத்தின் மூலம், மருத்துவ ஆய்வு மேலும் விருத்தியடைய உதவுவீர்கள் என நாங்கள் நம்புகின்றோம்.**

**உங்கள் நம்பிக்கைக்கு எமது இதயபூர்வமான நன்றி.**

**Insel Gruppe AG**, Direktion Lehre und Forschung CH-3010 Bern
einwilligungserklaerung-forschung@insel.ch, www.inselgruppe.ch
தொலைபேசி: 031 632 58 45